அம்பாசமுத்திரம் தொகுதி, விக்கிரமசிங்கபுரத்தில் அழகியன் கால்வாய்.

364—(* வினா எண் 9669) திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் விக்கிரமசிங்கநரத்தில் உள்ள வடக்கு கோடை மேல் அழகியன் கால்வாய் முழுவதும் சிமெண்ட் பிளேட் போடும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆம்' என்று சொன்னதற்கு அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு, எப்போது வேலை துவங்கப்படும் என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்க்கால்கள் மொத்தம் 11. தாமிரபரணி ஆற்றின் கீழே 8 அணைக்கட்டுகள் இருக்கின்றன. அதிலே 11 வாய்க்கால்கள் இருக்கின்றன. அதில் இது இரண்டாவது வாய்க்காலாகும். இதெல்லாம் உலக வங்கியினுடைய உதவியோடும், மைய அரசுடைய முயற்சியோடும், இதை அரசாங்கம் எடுத்து, இப்போது வேலைகளை துரிதமாக்கிக்கொண்டிருக்கிறது. அநேகமாக 1988 வாக்கில் இது முடியக் கூடிய நேரத்திலே, இதனுடைய எஸ்டிமேட்டைப் பற்றிச் சொல்லமுடியும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1987 ஏப்ரல் 9]

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றின் முதல் கால்வாயாக தெற்கு கோடைமேலழகியன் கால்வாயும், இரண்டாவதாக வடக்குக்கோடைமேலழகியன் கால்வாய் இருக்கின்றன. இதன் கீழ் ஏறத்தாழ 10, 15 கிலோமீட்டர் தொலைவிற்கு இந்தக் கால் வாய் சென்று, பல குக்கிராமங்களான, குறிப்பாக, திருவாலீஸ் வரன், மன்னார்கோவில், பிரம்மதேசம், சிவந்திபுரம், கோடாங் குளம் ஆகிய கிராமங்களிலுள்ள நஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் செல்லவேண்டும். ஆனால் ஒரு வாரத்திற்கு மூன்று தினங் களுக்கு தண்ணீர் விடப்படுவதால் அடிக்கடி அடைத்துவிடுகி றார்கள். அப்படிப்பட்ட நேரங்களிலே கீழே உள்ள கிராமங் களுக்குத் தண்ணீர் செல்லமுடியாத காரணத்தினால், சிமெண்ட் போட்டால் தான் சீக்கிரம் அவர்களுக்குத் தண்ணீர் செல்ல வாய்ப்பிருக்கிறது. ஆகவே அதையெல்லாம் கருத்தில் கொண்டு, அமைச்சரவர்கள் இந்த ஆண்டு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 11 வாய்க்கால்கள் இருக்கின்றன. ஒவ் வொரு வாய்க்காலும் ஏறத்தாழ 20 கிலோமீட்டருக்கு அதிகமாக இருக்கிறது. பல கோடி ரூபாய் அதற்காக செலவழிக்கவேண்டி வரும். ஆகவே தான் உலக வங்கி உதவியை நாம் நாடிக் கொண்டிருக்கிறோம். ஆகவே வேகமாக, துரிதமாக நடவடிக் கையை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும்.

பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்கு கால்வாய் வெட்டும் பணி.

365—(*வினா எண் 12850) திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாரூர் ஏரியில் இருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்கு கால் வாய் வெட்டும் பணி எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்கும் கால்வாய் வெட்டும் பணி ஏப்ரல் 1987-க்குள் முடிக்கப்படும்.